**Previous Examination date – 11.07.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 302 of 2013**

**Deposition of Witness P.W.9**

| | |
|---|---|
| **Name : ஹரிகிருஷ்ணன்** | **Father/Husband's Name : விலங்குதேவர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 17.02.2026.**

**A1 present. A2 died.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி சாமி தியேட்டர் அருகே குடியிருந்து ஆப்ப கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி ஸ்டீபன் ராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் 28.07.2013ம் தேதி 8.45 மணிக்கு அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2013ம் வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை பழனி காந்தி மார்கெட் ஒக்கலிக்கர் மண்டபத்திற்கு விசேசத்திற்காக வந்தபோது கழிவறைக்கு சென்றபோது ஒருவரை பிடித்து விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது இங்கே ஒரு நபர் செயினை கொண்டு சென்றாரா என்று கேட்டு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்ய சொன்னார்கள். நானும், சரவணனும் சாட்சி கையொப்பம் செய்தோம். ஆஜர் எதிரியை நான் பார்த்ததில்லை. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 28.07.2013ம் தேதி காலை 6.00 மணிக்கு ஒக்கலிக்கர் மண்டபத்திற்கு

விசேசத்திற்கு வந்தபோது ஆட்டோ ஸ்டாண்டின் அருகே ஓட முயற்சித்த ஆஜர் எதிரியை விசாரித்தபோது அவர் குற்ற செயலில் ஈடுபட்டு தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் எனவும், அதன் பேரில் ஒரு இருசக்கர வாகனத்தை ஒப்படைத்தார் எனவும், நகையை அடகு வைத்ததாக சொன்னார் எனவும், போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.02.17 18:16:07 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date – 11.07.2014**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 302 of 2013**

**Deposition of Witness P.W.10**

| | |
|---|---|
| **Name : பாண்டியராஜன்** | **Father/Husband's Name : கல்யாண சுந்தரம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 17.02.2026.**

**A1 present. A2 died.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பழனி பெரிய கடை வீதி பகுதியில் குடியிருந்து வினோத் ராஜா என்ற பெயரில் அடகு கடை நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 28.07.2013ம் தேதி 10.45 மணிக்கு உள்ள அத்தாட்சியில் உள்ள அடியில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு போலிசார் 5 பவுன் தங்க செயினை ஆஜர் எதிரியை காட்டி அவர் என் கடையில் அடமானம் வைத்திருப்பதாக சொல்லி 5 பவுன் நகையை கேட்டார்கள். நான் போலிசார் குற்ற நடவடிக்கை எடுப்பதாக தெரிந்து நான் மேற்படி போலிசாரிடம் ஒப்படைத்து அத்தாட்சியில் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் போலிசாரிடம் ஒப்படைத்தது. மேற்படி ஆஜர் எதிரி தான் எனது நகை கடையில் அடகு வைத்தார். மேற்படி நகையை ஆஜர் எதிரி 50 ஆயிரத்திற்கு அடகு வைத்தார். போலிசார் என்னிடம் என் கடையில் அடகு வைத்த ரசீதை காட்டி மேற்படி நகையை பெற்று சென்றார்கள். **28.07.2013ம் தேதி 10.45 மணிக்கு உள்ள அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. செயின் இருக்கும் புகைப்படம் அ.சா.ஆ.7 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2. நான் பழனியில் எவ்வளவு நாட்களாக அடகு கடை நடத்தி வருகிறேன் என்றால் 20 வருடங்களாக அடகு கடை நடத்தி வருகிறேன். போலிசார் எதிரியை

கடைக்கு அழைத்து வந்ததாக சொல்லியுள்ளதில் எத்தனை போலிசார் வந்தார்கள் என்றும், எதிரியுடன் எத்தனை பேரை அழைத்து வந்தார்கள் என்றும் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. எனது கடையில் அந்த நேரத்தில் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்றால் நான் மட்டும் தான் நடத்தி வந்தேன். எந்த தேதியில் என்னிடம் அடமானம் வைத்தார் என்று நாள், விபரம் சொல்ல இயலுமா என்றால் 10 வருடத்திற்கு மேலானதால் ஞாபகமில்லை. எதிரி அடகு வைக்க வந்ததாக சொல்லும் நேரத்தில் எதிரியுடன் வேறு நபர்கள் அல்லது பெண்கள் வந்தார்களா என்றால் ஞாபகமில்லை. அ.சா.ஆ.7 புகைப்படம் எங்கு வைத்து யாரால் எடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நகை அடகு வைத்ததாக சொல்லியுள்ள ரசீதை போலிசார் என்னிடம் வாங்கினார்களா என்றால் அந்த ரசீதை கொடுத்துவிட்டு நகையை பெற்று சென்றார்கள். நகை அடகு வைக்கும்போது ரசீதின் ஒரு நகல் எங்கள் கடையில் இருக்கும் என்றாலும் ரசீது அசலை அடகு வைக்கும் நபரிடம் கொடுப்போம் என்றாலும் சரிதான். 28.07.2013ம் தேதி 10.45 மணிக்கு உள்ள அத்தாட்சி எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அத்தாட்சி என் முன்னிலையில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. அத்தாட்சியில் உள்ள விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். நான் பழனியில் நீண்ட காலமாக அடகு கடை வைத்துள்ளதால் போலிஸ் உதவி தேவைப்படும் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். நான் முதல் விசாரணையில் பொய்யான விபரங்களை சொன்னேன் என்றால் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.02.17 18:16:14 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.